அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 08/2018

எனது இலக்கம் : EST-7/COMPT/02/3000/4
அரச நிர்வாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.06.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள்

**<u>ஆபத்தான பதவிகளில் ஈடுபடும் போது அல்லது பதவியில் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையிலிருக்கும் போது நோயுற்று மரணமடையும் அரச அலுவலர்களின் கீழ் தங்கிவாழ்வோருக்கு இழப்பீடுகளை வழங்குதல்</u>**

நிரந்தர, ஓய்வூதியத்துடனான பதவியொன்றை வகிக்கும் போது அல்லது அவ்வாறு பதவி வகிக்காத அரச அலுவலரொருவர் ஆபத்தான கடமையில் ஈடுபடும் போது அல்லது பதவியில் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அல்லது நோயுற்று மரணமடைய நேரிடும் பட்சத்தில், அவரின் கீழ் தங்கிவாழ்வோருக்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்கு 2017.08.15 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

02. அதற்கிணங்க இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது நிறுவனத் தலைவர்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை கடைபிடிப்பது உசிதமானதாகும்.

I. அரச சேவையில், அலுவலர்கள் ஆபத்தான கடமைகளில் ஈடுபடும் போது அல்லது பதவியில் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையினை நிறைவேற்றும் போது நோயுற்று மரணமடைய நேரிடும் பட்சத்தில், அவை ஒவ்வொன்றுக்குமான இழப்பீட்டு விண்ணப்பங்கள், உரிய அமைச்சின் செயலாளரினால், அவ்வாறு அந்நோய்க்காளாதிருப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்ற சான்றிதழுடன் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்தல்.

II. சுகாதார அமைச்சில் நிறுவப்பட்டுள்ள வைத்திய சேவை மேலதிகச் செயலாளரின் தலைமையில், மரணித்த அலுவலருக்கு பீடிக்கப்பட்டுள்ள நோய்க்கு ஏற்ப நியமிக்கப்பட்ட நிபுணத்துவ வைத்தியர்கள் இருவரைக் கொண்ட குழுவிடம் மேற்கூறிய விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல்.

III. இக் குழுவின் பரிந்துரையை சுகாதார அமைச்சின் செயலாளரினால் குறித்த அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்தல்.

IV. அக் குழுவின் பரிந்துரைக்கு இணங்க குறித்த அலுவலரின் கீழ் தங்கிவாழ்வோருக்கு இழப்பீட்டினை வழங்குவதற்கான முன்மொழிவினை அமைச்சரவைக்கு அனுப்பி வைப்பதற்கு உரிய அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்தல்.

03. அலுவலர் மரணித்த திகதிக்குரிய கொடுப்பனவுகள் இன்றிய மாதாந்த சம்பளத்தினைப் போன்று நூற்றிருபது (120) மாதங்களுக்கு சம்பளத்தினை அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அவரின் கீழ் தங்கிவாழ்வோருக்கு செலுத்துவதற்கு நிறுவனத் தலைவரினால் நடவடிக்கை எடுத்தல்.

04. இவ் இழப்பீட்டுத் தொகையானது உரிய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அவ் வருடத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

05. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டின் பிரகாரம் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு